பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஸூ கார்த்திகை மீ 28 உ வெள்ளிக்கிழமை (14 12-1990) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 18

# உண்மை நிலையைக் கண்டறிய பிரிட்டிஷ் தூதருக்குப் பணிப்புரை

## தமிழ்ப் பகுதிகளுக்கு நேரில் வருவார்

லண்டன், டிச. 14

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் உண்மை நிலையை நேரில் சென்று கண்டறிந்து, அறிக்கை சமர்ப்பிக்குமாறு, பிரிட்டிஷ் அரசாங்கம் கொழும்பில் உள்ள தனது தூதுவரைப் பணித்திருக்கிறது.

பிரிட்டிஷ் அரசாங்கம், இலங்கை அரசுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றுக்குக் கிடைத்த பதில் திருப்திகரமாக இல்லாததாலேயே, தூதுவர் நேரில் சென்று உண்மை நிலையை அறியுமாறு பணிக்கப்பட்டிருக்கிறார்.

கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த எம்.பியான திரு. மைக்கல் போல் அண்மையில் நாடாளுமன்றத்திலும், கட்சிக் கூட்டத்திலும் இலங்கையில் தமிழர்கள் இனக்கொலை செய்யப்படுவது குறித்து நீண்ட உரைகளை ஆற்றினார்.

அதனைத் தொடர்ந்து பிரிட்டிஷ் அரசு, இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு வடக்கு - கிழக்கு நிலைமை குறித்து விவரம் கோரியது.

இலங்கை அரசு அதற்கு அனுப்பிய பதிலில், வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தமே நடக்கிறது என்றும்-

தமிழ் மக்களுக்கு எதிராகத் தாக்குதல்கள் நடத்தப்படவில்லை என்றும்- தெரிவித்திருந்தது.

அதனை அடுத்தே பிரிட்டிஷ் அரசாங்கம், கொழும்பில் உள்ள தூதுவரை, தமிழ்ப் பகுதிகளுக்கு நேரில் சென்று அங்குள்ள உண்மை நிலையைச் சுயேட்சையாக அறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் திரு. கிளாட்சன் தமிழ்ப் பகுதிகளுக்கு விரைவில் நேரில் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மைக்கல் போல் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் கூட்டத்தில் ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து உரை

[2ஆம் பக்கம் பார்க்க]

## சந்திரசேகரின் கூட்டம் மீது கல் வீச்சு!

லக்னோ, டிச. 14

உத்தரப் பிரதேசம், பல்லா என்னும் இடத்தில் பிரதமர் சந்திரசேகர் கலந்துகொண்ட பொதுக்கூட்டம் ஒன்றில் கற்கள் வீசப்பட்டன. அப்போது கூட்ட மேடையில் அமர்ந்திருந்த சுகாதாரத்துறை துணை அமைச்சர் ரஹ்பான் காயமடைந்தார்.

உத்தரப்பிரதேச முதலமைச்சர் முலாயம் சிங் யாதவ் பேசிக்கொண்டிருந்த சமயமே மேடையை நோக்கி கற்கள் வீசப்பட்டன.

[ஓ-எ]

## நத்தார் வாழ்த்து மடல்களில் ஈழத் தமிழரின் அவலங்கள்!

### லண்டனில் அமோக விற்பனை!!

லண்டன், டிச. 14

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் சொல்லொணா துன்பங்களையும், துயரங்களையும் சித்திரிக்கும் வண்ணப் படங்களைக் கொண்ட நத்தார் வாழ்த்து மடல்கள் லண்டனில் விற்பனைக்கு வந்துள்ளன.

சிறு சிறு கூடாரங்களில் அகதி மக்கள் படும் அவலங்கள், பச்சிளம் சிறார்கள் பதுங்கு குழிகளுக்குள் பதுங்கும் மனதை உருக்கும் காட்சிகள் மற்றும் அகதிகள் அனுபவிக்கும் பலவித இன்னல்கள் வண்ண, வண்ண ஓவியங்களில் பளிச்சென அச்சிடப்பட்டுள்ளன.

இந்த வாழ்த்து மடல்களுக்கு லண்டனில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதுவரை ஆயிரக்கணக்கில் மடல்கள் விற்பனையாகி விட்டன.

லண்டனில் உள்ள தென்னிந்திய திருச்சபையினர் இதை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர் [ஓ-3]

## யாழ். நகரில் ஹெலி சூடு!

யாழ்ப்பாணம், டிச. 14

கடந்த சில நாட்களின் பின்னர், ஹெலி நேற்று மீண்டும் யாழ். நகரில் வேட்டுக்களைத் தீர்த்தது.

மாலை 5 மணியளவில் திடீரென வந்த ஹெலி, யாழ். நகரை வலம் வந்து, கோட்டைப் பகுதியில் வேட்டுக்களைத் தீர்த்துவிட்டு சில நிமிடங்களில் திரும்பிச் சென்றுவிட்டது.

யாழ். அசோக் ஹோட்டல் பகுதியில், யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயத்துக்குச் சற்றுத் தள்ளி சன்னங்கள் விழுந்ததாகக் கூறப்பட்டது.

[ஓ-5-3]

## கொக்கிளாய்ப் பகுதியில் பொம்மர்கள் குண்டுவீச்சு!

### பொதுமக்கள் பலர் உயிரிழப்பு

கொழும்பு, டிச.14

முல்லைத்தீவு மாவட்டம், கொக்கிளாய்ப் பகுதியில் நேற்று விமானப்படையினர் கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தினர்.

பொம்மர்களும், ஹெலிகளும் இப்பகுதியில் பலத்த தாக்குதல்களை நடத்தின என்றும்-

விமானப்படையினருக்கு உதவியாக இராணுவத்தினரும் தாக்குதல்களில் ஈடுபட்டனர் என்றும்- கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றைய குண்டு வீச்சுக்களினால் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் உடைமைகளுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டிருக்கக் கூடும் என்றும் அஞ்சப்பட்டது. [ஓ-6]

## மீளக் குடியமர்தல், உற்பத்தி முயற்சி நன்கொடை

## நிவாரணக் கொடுப்பனவுகள் மீண்டும் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிச. 14

மீளக் குடியமர்தல் நிவாரணம், உற்பத்தித் திறன் வாய்ந்த தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான நிவாரணம் போன்ற ஒருங்கிணைந்த புனர்வாழ்வுத் திட்ட நிவாரணக் கொடுப்பனவுகள் மீண்டும் வழங்கப்பட இருக்கின்றன.

கடந்த ஜூன் மாதத்திற்குப் பின்னர் இந்த நிவாரணக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்த நிவாரணக் கொடுப்பனவுகளை இதுவரை பெறாதவர்களுக்கு அவற்றை வங்கி ''டிராப்டாக'' வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## எர்ஷாத், குடும்பத்தினருக்கு 4 மாத வீட்டுக் காவல்!

டாக்கா, டிச. 14

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட பங்களாதேஷின் முன்னாள் ஜனாதிபதி எர்ஷாத் தொடர்ந்து நான்கு மாதங்கள் வீட்டுக் காவலில் வைக்கப்படவேண்டும் என்று அரசு விசேட உத்தரவு ஒன்றைப் பிறப்பித்திருக்கிறது.

எர்ஷாத்தையும் அவரது குடும்பத்தினரையும், பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகரின் பழைய வாசஸ்தலத்தில் அரசு காவலில் வைத்துள்ளது.

இதேவேளை —

பங்களாதேஷின் முன்னாள் துணைப் பிரதமர் உட்பட எர்ஷாத்தின் நெருங்கிய

(2 ஆம் பக்கம் பார்க்க)

## 33 புளொட் உறுப்பினரை விடுவிக்க மாலைதீவு தயார்

கொழும்பு, டிச 14

மாலைதீவில் ஆயுட் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள 68 புளொட் உறுப்பினர்களில் 33 பேரை பொறுப்பேற்றுக் கொள்ளும்படி இலங்கை அரசாங்கத்தை மாலே அரசு கேட்டுள்ளது.

இதுபற்றி முடிவு எடுக்கும் பொறுப்பு இலங்கை ஜனாதிபதியிடம் விடப்பட்டுள்ளது. அவர் அதுகுறித்து விரைவில் முடிவு எடுப்பார்.

இத் தகவலை பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஆகஸ்ட் வேதனம் சில தினங்களில்; ஆனால் அதன் பின்

## வ.பி.போ.ச. ஊழியர் சம்பளம் திறைசேரி நிதி தந்தால்தான்!

யாழ்ப்பாணம், டிச.14

திறைசேரி பணம் ஒதுக்கித் தந்தால் மட்டுமே வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு- இதுவரை வழங்கப்படாத மாதங்களுக்குரிய முழுச் சம்பளமும் கிடைக்கும்.

ஆனால் ஆகஸ்ட் மாதச் சம்பளம் இன்னும் சில தினங்களில் வழங்கப்பட்டு விடும்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் திரும்பியுள்ள வ.பி.போ. சபையின் கணக்காளர் திரு. திலகேஸ்வரன் இவ்வாறு நேற்று உதயனுக்குத் தகவல் வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஆகஸ்ட் மாதச் சம்பளம் வழங்குவதற்கு 27 லட்சம் ரூபாவுக்கு கட்டுநிதி அனுப்பப்பட்டுள்ளது. இலங்கை வங்கி பணம் தந்தால், ஊழியருக்கு இன்னும் சில தினங்களில் பணமாக சம்பளம் வழங்கப்படும். இல்லையேல் காசோலையாகவே வழங்க நேரிடும்-என்றார்.

இதுவரை வழங்கப்படாத ஏனைய மாதங்களுக்குரிய சம்பளம் குறித்து கொழும்பில் மத்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினோம்.

மத்திய போக்குவரத்துச் சபை ''பணம் இல்லை'' என்று கைவிரித்துவிட்டது.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் கவனத்துக்கு!

காகிதத் தட்டுப்பாடு காரணமாக, உதயனின் நான்கு பக்கங்களும் இரண்டு தனித் தாள்களில் அச்சிடப்பட்டுள்ளன.

பத்திரிகை முழுவதையும் வாசிப்பதற்கு, இரண்டாவது தாளும் இருக்கின்றதா என்பதைச் சரிபார்த்து, அதனைத் தவறவிடாது கேட்டு வாங்குங்கள்

## மன்னாரில் சுற்றிவளைப்பு; மக்கள் பேசாலையில் தஞ்சம்

### படையினர் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

மன்னார், டிச. 14

மன்னாரில் கடந்த திங்கட்கிழமை படையினர் சில பகுதிகளைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

பேசாலை, தாழ்வுபாடு பகுதிகளிலும் வீடு, வீடாகத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

நகரப் பகுதியில் இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இலக்காகி சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஒரு தமிழ்ப் பொதுமகன் உயிரிழந்தார் என்றும் மற்றொருவரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவங்களை அடுத்து அப்பகுதிப் பொதுமக்களில் சிலர் பேசாலை தேவாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர். [ஓ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளுக்கு அடி, உதை; நோவைப் போக்க மருந்து!

கொழும்பு, டிச. 14

கொழும்பிலுள்ள அகதி முகாம்களில் தங்கியிருக்கும் தமிழர்களுக்கு உணவு வசதி கிடைக்கிறது என்பது ஏதோ உண்மைதான். ஆனால் சில நாட்களில் இருவேளை உணவும் பாணாகவே இருக்கிறது. ஆனால் அது குறித்து மூச்சு விடாமல் சாப்பிட்டுவிட வேண்டும்.

உணவு குறித்துப் புகார் எதுவும் கூறினால் அடி, உதைதான் கிடைக்கும். அகதி முகாம்களை நிர்வகித்து வரும் இளைஞர்கள் உணவுகுறித்து முறைப்படுவோரைக் கண்டபடி நொருக்கி விடுகிறார்களாம்!

இளம் வயதினரே கூடுதலாகத் தாக்குதலுக்கு இலக்காகின்றனர். முதியவர்கள் 'மூச்சு' விட்டாலும் அதே கதி தான்!!

தாக்குதலுக்கு இலக்கானோர் காயப்பட்டு, வேதனையில் முனகிக் கொண்டிருந்தால், மருத்துவ வசதியும் கிடைக்கிறது.

கொழும்பிலுள்ள செஞ்சிலுவைச் சங்கத்தினர் இந்தப் பணியைச் செய்து வருகின்றனர்.

கொழும்பில் தமிழர்கள் தங்கியுள்ள அனைத்து அகதி முகாம்களையும் தமிழ்க் குழு ஒன்றே நிர்வகித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-3]

# யாழ். ஆசிரியர் சம்பளம்: உடன் அனுப்பக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 14

யாழ்-மாவட்ட ஆசிரியர்களுக்குரிய நவம்பர், டிசம்பர் மாத சம்பளத்தைப் பணமாக அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு, அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு அவசர கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம், அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் ஆகிய இருவரும் இந்த அவசர கோரிக்கையை கடந்த புதன்கிழமை கூட்டாக விடுத்தனர்.

யாழ்-மாவட்ட ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு மாதாந்தம் தேவையான தொகைக்குரிய கட்டுநிதி வழமையாக மாகாண சபையால் அனுப்பப்பட்டு வந்தது.

சம்பளத்தைப் பணமாக வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு யாழ்-கல்வி அலுவலகம் மாகாணசபைக்கும், மத்திய கல்வி அமைச்சுக்கும் கோரிக்கை விடுத்திருந்தது.

ஆனால் இதுசம்பந்தமான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. அத்துடன் கட்டு நிதியும் கிடைக்கவில்லை. அதைத் தொடர்ந்தே அவசர கோரிக்கை விடப்பட்டுள்ளது. (அ-3)

# பிறப்பு-இறப்பு பதிவு மீண்டும் போதனா ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், டிச. 14

யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து இடம்பெயர்ந்த பிறப்பு இறப்பு பதிவுக் காரியாலயம் எதிர்வரும் திங்கள் முதல் யாழ். போதனா வைத்தியசாலையில் மீள இயங்கவுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக வைத்தியசாலை மூடப்பட்டதை அடுத்து பதிவுக்காரியாலயம் புங்கங்குளம் சிவசக்தி மருந்துச்சாலையில் இயங்கி வந்தது.

வெளிநோயாளர் பிரிவு 16 ஆம் இலக்க அறை இக்காரியாலயத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. (இ-15)

# குப்பை அகற்றும் வேலை நகரில் மீண்டும் ஆரம்பம்

வீதிகளில் தேங்கிக் கிடக்கும் குப்பை கூளங்களை அகற்றும் பணியில் யாழ்-மாநகரசபை டிரக்டர்கள் ஈடுபடத் தொடங்கியுள்ளன.

கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக வீதிகளில் தேங்கிக் கிடந்த குப்பை கூளங்களை அகற்றும் பணி மீண்டும் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இடிபாடுகளால் நிரம்பி இருக்கும் வடிகால்களில் இருந்து மண், கற்கள் போன்றவற்றை அகற்றி கழிவு நீர் தேங்கி நிற்காமல் செல்வதற்கான வேலைகளிலும் மாநகரசபை ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வீதிகளைப் பெருக்கும் பணியில் பெண் ஊழியர்கள் ஈடுபட்டு வருவதையும் இப்போது காணக்கூடியதாக இருக்கிறது. [அ-51]


## புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## ஞாபகார்த்த பலிப்பூசை

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்களான திரு. X. D. M. கொன்ஸ்ரன்ரயின், அருட் சகோதரிகள். M. தார்சீசியஸ், யூபிரேசியாலம்பேட் என்பவர்களினுடைய ஆன்ம சாந்திக்காக யாழ். ஆசனக் கோவிலில் 15 - 12 - 90 சனிக்கிழமை காலை 8 - 15 மணிக்கு இரங்கற் பலி நிறைவேற்றப்படும். இப்பலியில் பங்குகொள்ள உறவினர்கள், நண்பர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆசிரிய சங்கச் செயலாளர்.

[15118]


# ஆசிரியர் கலாசாலை இன்று திறப்பு விழா

யாழ்ப்பாணம், டிச. 14

கோப்பாயிலிருந்து திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்துக்கு தற்காலிகமாக மாற்றப்பட்டிருக்கும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் திறப்பு விழா இன்று காலை 10 மணிக்கு நடைபெறும்.

கலாசாலை அதிபர் திரு. ஆர். எஸ். நடராசா தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். [ஒ-3-6]

# கொழும்பில் 10 ஆயிரம் அகதிகள்

கொழும்பு, டிச. 14

கொழும்பிலுள்ள எட்டு அகதி முகாம்களிலும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தங்கியுள்ளனர்.

இவர்களில் அனேகர் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. [ஒ-3]

# கலைக்கும் எண்ணம் இல்லையாம்!

புதுடில்லி, டிச. 14

தமிழ்நாடு மாநில அரசைக் கலைக்கும் எண்ணம் எனக்கு இல்லை. அப்படி யாரும் நினைத்துக் கொண்டால் அதற்கு நான் பொறுப்பு அல்லன்.

இப்படி பிரதமர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார். (ஒ-எ)

# அமைச்சர் ஊர்ஜிதம்

கொழும்பு, டிச. 14

ஜே. வி. பியின் தற்போதைய தலைவர் சோமவன்ஸ அமரசிங்க இந்தியாவுக்குத் தப்பிச் செல்வதற்கு இராணுவ அதிகாரி உதவி புரிந்தார் என்பதை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்று செய்தியாளர் மாநாட்டில் ஊர்ஜிதம் செய்தார். [ஒ-எ]

# இன்று நடைபெறும் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிச. 14

தென் தமிழீழ மக்களின் நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் பாடசாலைகளின் இன்றைய அடிப்படைப் பிரச்சினை குறித்தும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கொத்தணி அதிபர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோரை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்டக் கல்விப் பிரிவினர் கோட்ட ரீதியாக சந்தித்து கலந்துரையாடவிருக்கின்றனர்.

யாழ். கோட்டம், மருதனார்மடம் கோட்டம் ஆகியவற்றுக்கான சந்திப்பு முறையே இன்று காலை 10 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், நண்பகல் 2 மணிக்கு இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஃ)

# சோவியத்துக்கு 100 கோடி டாலர் அமெரிக்கக் கடன்

வாஷிங்டன், டிச. 14

சோவியத் யூனியனுக்கு கடனாக 100 கோடி டாலர்களை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

எதிர்பார்க்கப்படும் உணவுப்பஞ்சத்தைத் தவிர்ப்பதற்குத் தேவையான உணவுப் பொருள்களை சோவியத் யூனியன் வாங்குவதற்காக இப்பணத்தை வழங்குவதாக அமெரிக்க ... டன் நேற்று அறிவித்தார். [ஒ-எ]

# பாடசாலை முகாம்களை மூடுவது பற்றி ஆலோசனை

யாழ். மாவட்ட பாடசாலைகளில் இயங்கி வரும் அகதி முகாம்களை மூடிவிட்டு, அங்கிருக்கும் மக்களுக்கு மாற்று தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இது சம்பந்தமாக இன்று யாழ். செயலகத்தில் நடைபெறும் கலந்துரையாடல் ஒன்றில் விரிவாக ஆராயப்பட இருக்கிறது.

யாழ். அரச அதிபர், கல்விப் பணிப்பாளர் மற்றும் யாழ். மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துரையாடலில் பங்குபற்றவுள்ளனர்.

புதிதாக தெரிவு செய்யப்பட இருக்கும் இடங்களில் குடிசைகள் அமைத்துக் கொடுத்து உதவ அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் முன்வந்துள்ளது. [ஒ-3]

# தொண்டர் ஆசிரியருக்கான நேர்முகப் பரீட்சை 19 இல்

யாழ் மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான முகப்பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி முதல்-கோட்ட ரீதியாக-யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

நேர்முகப் பரீட்சைக்குரிய கோட்டங்களும், அவற்றுக்குரிய திகதிகளும் வருமாறு;

பருத்தித்துறைக் கோட்டம் - 19, 20, 21 ஆம் திகதிகள் (காலை 8.30 மணிக்கு)

யாழ்ப்பாணக் கோட்டம்- 19, 20 ஆம் திகதிகள் (பிற்பகல் 1.00 மணிக்கு)

மருதனாமடக் கோட்டம்- 21, 22, 24 ஆம் திகதிகள் [பிற்பகல்].

வேலணைக் கோட்டம் - 22 24 ஆம் திகதிகள் (காலை).

சாவகச்சேரிக் கோட்டம்- 26 ஆம் திகதி

பண்டத்தரிப்புக் கோட்டம் -27,28,29 ஆம் திகதிகள் (முழு நாளும்)

இதேசமயம் அரச சேவையில் நியமனம் பெற்றவர்களுக்கு நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டா என்று கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-6)

# ஷெல் தாக்குதல்

பலாலி முகாமில் இருந்து நேற்று மாலை 6 மணியளவில் வீமன்காமம் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (ஒ-3-5)

# விஜயம்

தென் கொரிய ஜனாதிபதி ஒட்டே-பூ சோவியத் யூனியனுக்கு 4 நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று அங்கு புறப்பட்டுச் சென்றார்.

தென் கொரியத் தலைவர் ஒருவர் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-6]

## வ. பி. போ. ச -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திறைசேரி பணம் ஒதுக்கினால் மட்டுமே முழுச் சம்பளமும் வழங்க முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்துவிட்டனர்.

எனினும் வ. பி. போ. சபையின் பதில் முகாமையாளர் கொழும்பில் தங்கியுள்ளார். அவர் இது குறித்து மேலும் முயற்சி செய்வார்— என்று கணக்காளர் மேலும் சொன்னார். [ஒ-3 5]

## உண்மைநிலை. ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றும்போது —

ஈழத் தமிழர்கள் படும் இன்னகைள்பற்றியும்—

விரைந்து நிரந்தரத் தீர்வு ஒன்று காணப்பட வேண்டிய தன் அவசியம் பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறினார்.

லண்டனில் உள்ள தென்னிந்திய திருச்சபைப் பிரதிநிதிகள் இலங்கை நிலைமை குறித்து திரு. போலிடம் விரிவாக எடுத்துக் கூறியதை அடுத்தே அவர் இதுவிடயத்தை தக்கட்சி மட்டத்திலும், நாடாளுமன்றத்திலும் பிரஸ்தாபித்தார். [அ-3]

## எர்ஷாத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சகாக்களான 16 அரசியல் வாதிகளும் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் ... மத்திய ... காவலில் வைக்கப்பட்டுள்ளனர். [ஒ-எ-6]

# முஸ்லிம்கள் இருவர் கைதாகினர்

கொழும்பு, டிச. 14

கொட்டாஞ்சேனையில் தமிழருக்குச் சொந்தமான தனியார் வைத்தியசாலை மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக முஸ்லிம் தீவிரவாதக் குழுவைச் சேர்ந்த இருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [ஒ-3]

## 33 புளொட்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விஜரத்தினா நேற்று செய்தியாளரிடம் வெளியிட்டார்

மாலைதீவு அரசைக் கவிழ்க்கும் சதி முயற்சியில் ஈடுபட்டதற்காக 68 புளொட் உறுப்பினர்களும் மாலைதீவில் ஆயுட் சிறைத் தண்டனை அனுபவித்து வருவது தெரிந்ததே. [ஒ-எ]

## நிவாரணக்.....

[1 ஆம்பக்கத் தொடர்ச்சி]

பட்டு வருகிறது.

வங்கி அதிகாரிகளுடன் கலந்தாலோசித்த பின்னர் நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படும் திகதி குறித்து அறிவிக்கப்படும்,

யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் இத் தகவலைத் தெரிவித்தார். [ஒ-3]


## PERSONAL CLASSES

**B.M.C. முன் லேன் - யாழ்ப்பாணம்**

A/L 92 Pure / Applied

★ திரு. வேலாயுதம் B.sc. (cey) ★

ஆரம்பம்: 15-12-90 Sat 4 P.M.

(A/L 91 & 90 வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன)

(15121)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லம் சுப்பிரமணியம்

திருமதி செல்லம் சுப்பிரமணியம் 9-11-90இல் காலமானார். இவர் அராலி தெற்கைச் சேர்ந்தவரும், மூளாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருநெல்வேலி 232, இராமநாதன் வீதியில் வசித்தவரும், காலம்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், தங்கம்மா, சிவகுரு (Rtd Driector Ministry of Industry Colombo, 42 Moor Road), சுப்பிரமணியம் நடராசா (M.L.T) பெறாமகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சின்னத்துரை, திருமதி பரமகலியாணி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவராசா சிவதேவி, சித்திராதேவி, சிவகுமார் (இலங்கை வங்கி, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்), இந்திராதேவி, பாலகுமார், குலேந்திரன் [அமெரிக்கா], செல்வேந்திரன், வதனா [லண்டன்] முத்துக்குமாரு (வியாபாரம்), சிவலிங்கம் [சவூதி], விஜயவேல் குமாரன் [M.K Industry, Thirunelvali சுபாஜினி [அமெரிக்கா], வினோஜினி ஆகியோரின் பேத்தியும், செந்தூரன், ஆரூரன், மேனகா, ஜனகன், கிரிசா, நிதர்ஷன் ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-12-90 அன்று அராலியில் பூனாவோடை மயானத்தில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;

பேரன்-சிவகுமார்,

[15102]

## ஆ. முத்துக்குமாரு

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆ. முத்துக்குமாரு காலமாகிவிட்டார்.

இவர் காலம்சென்ற செங்கமலத்தின் கணவரும், அம்பிகாநிதி [கற்பகம்] யின் அருமைத் தந்தையும், கந்தையா நாகேசுவின் மாமனாரும், விக்னராஜா [சுவிஸ்], செல்வராஜா [சுவிஸ்], நவமணி [சுவிஸ்] அருந்ததி [சுவிஸ்] ஆகியோரின் பேரனும், காயத்திரி, கஸ்தூரி, அர்சுனா, அபிநயா ஆகியோரின் பூட்டனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-12-90 வியாழக்கிழமை பி. ப. 4.00 மணிக்கு மணல் காட்டு மயானத்தில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;

புங்குடுதீவு. க. நாகேசு

[15120]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14 - 12 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இந்தியாவின் நிலை

எந்த நிலையிலும் இலங்கைக்குத் தனது படைகளை அனுப்பப்போவதில்லை என்று அதே சமயம் பிறநாடுகள் இலங்கையில் தலையிட அனுமதிக்கப்போவதில்லை எனவும் இந்தியா அறிவித்திருக்கிறது.

இந்திய வெளியுறவு அமைச்சர் வித்தியாசரண் சுக்லா இந்திய வெளியுறவு அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக் கூட்டத்தில் இந்தியாவின் இன்றைய நிலையைத் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

இந்த ஜூன்மாதம் ஸ்ரீலங்காப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தம் ஆரம்பமான நாளில் இருந்து இந்தியாவின் எந்த ஒரு நடவடிக்கையும் தமிழ் மக்களுக்கு ஊக்கம் தரக்கூடியதாக இருந்ததில்லை.

இலங்கை அரசாங்கத்தின் அழிப்பு நடவடிக்கைகளுக்கே அது ஊக்கம் அளித்து வந்தது எனலாம்.

இலங்கைப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை அதில் இந்தியா தலையிடாது என்று வி.பி.சிங் அரசு தெரிவித்து வந்தது தற்போது சந்திரசேகர் அரசும் அதையே மீண்டும், மீண்டும் வலியுறுத்தி வருகிறது இலங்கை விவகாரத்தில் கவலை தெரிவிப்பதுடன் நிறுத்திக்கொள்கிறது

வி.பி.சிங் அரசுக்கு முன்னர் பதவியில் இருந்த ராஜீவ் காந்தியின் ஆட்சிக் காலத்திலேயே இலங்கைக்கு இந்தியப் படைகள் அனுப்பப்பட்டு ஆயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருந்தனர் அத்துடன் இப்படையினரின் அழிப்பு நடவடிக்கைகளால் தமிழ்மண்ணில் பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களுக்குப் பாரிய இழப்பு ஏற்பட்டிருந்தது. தனது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ஈழத்தமிழர் மீது ஸ்ரீலங்கா அரசின் எதேச்சாதிகாரத் தீர்வுகளைத் திணிப்பதற்கு முயன்று ராஜீவ்காந்தி இறுதியில் தோல்வி அடைந்தார். ஆயிரத்துக்குமேற்பட்ட படையினரின் இழப்புகளுடன் இந்தியா இலங்கையில் இருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் உள்நோக்கம் எத்தகையது என்பதை தமிழ் மக்கள் நேரில் அறிந்துகொள்ள இந்தியப் படைகளின் இலங்கை வருகை ஒரு சந்தர்ப்பம் தந்தது.

தற்போது அதே ராஜீவ் காந்தியின் கையில் சிக்கிக் கொண்டு ஆட்சி நடத்துகிறார் சந்திரசேகர்.

ராஜீவுக்கு நல்ல பிள்ளையாக நடக்க அவர் எத்தனிப்பதில் ஆச்சரியம் இல்லை.

ஆகவே இந்தியாவிடம் இருந்தும் மீண்டும் படையை எதிர்பார்ப்பதற்கு தமிழீழமக்கள் முட்டாள்களாக இருக்க முடியாது. இன்றைய நிலையில் எமக்குத் தேவையானது இந்தியாவின் தார்மீக ஆதரவே அதுவும் இதயசுத்தி உள்ளதாகவே இருக்க வேண்டும்.

வெளிநாட்டுப் படைகள் எதனதும் உதவியைத் தமிழர்கள் எதிர்பார்க்கவில்லை.

இந்தியா தான் தீர்ப்பதற்கு உதவி செய்யாவிட்டால் மற்றவர்கள் தலையிட்டுத் தீர்ப்பதை தடுக்கும் என்பது அது அதன் முழுச்சுயநலத்தையுமே பிரதிபலிக்கிறது.

---

கெரில்லா தாக்குதல் குழுவாகவிருந்த

# விடுதலைப் புலிகள் இயக்கம் மரபுவழி ராணுவமாக மாறுகிறது

## கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை விமர்சனம்

கொழும்பு, டிச. 14

போராளிகள் வெற்றிகரமாக நடத்திய தாக்குதல். அந்த இயக்கம் மரபு வழி இராணுவமாக மாறிவருவதையே எடுத்துக் காட்டுகிறது

'சண்டே ஐலண்ட்' பத்திரிகையில் 'தாரகி' எழுதிய அரசியல் கட்டுரையில் முன் கண்டவாறு விமர்சிக்கப்பட்டுள்ளது.

அக் கட்டுரையின் சில பகுதிகள் வருமாறு;

கடந்த ஜூன் மாதத்தில் அரசுக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இடையே ஆரம்பமான யுத்தம், புலிகள் இயக்கத்தை இனியும் ஒரு கெரில்லாக் குழுவாக கருதமுடியாது என்பதையே எடுத்துக் காட்டி உள்ளது.

வடபகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு மரபு வழி படையாக (Conventional Force) செயல்படுவது என்பது நடைமுறையில் அதிகமாக இடம்பெற்று வருகிறது அந்த வழியில் சிந்தித்து உத்திகளை வகுத்தும் வருகிறது.

எதிர்காலத்தில் விடுதலைப் புலிகளை சக்தி மிக்க ஆயுதங்களைப் பாவித்து ஓரம் கட்டினாலும், மரபு வழி இராணுவ முறைகளை கட்டி எழுப்பக்கூடிய தேவையான அனுபவங்களை விடுதலைப் புலிகள் பெற்றுவிட்டார்கள் என்பதை இச்சந்தர்ப்பத்தில் ஏற்றுக்கொள்வதே நீதியானதாக இருக்கும்.

கெரில்லா உத்திகளைக் கையாண்டு வந்த விடுதலைப் புலிகளின் யுகம் (Era) முடிவுக்கு வந்துகொண்டிருக்கிறது.

மாங்குளம் இராணுவ முகாம் அவர்களிடம் வீழ்ச்சி அடைந்தது அதனையே எடுத்துக்காட்டுகிறது

யாழ் கோட்டை முகாம் முற்றுகை, கொக்காவில் முகாம் மீதான தாக்குதல், மாங்குளம் வீழ்ச்சி ஆகியன தொடர்பாக விடுதலைப்புலிகள் திட்டமிட்டு செயற்படுத்திய உத்திகளை மதிப்பீடு செய்யவேண்டும்.

— இப்படி அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. [உ-எ]

## கலந்த வலயில் புதிய குடியிருப்பு

யாழ்ப்பாணம் டிச. 14

கடந்த ஒக்ரோபரில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது கோப்பாய், துறைமுகம், சாந்திபுரம் ஆகிய கிராமங்களில் வீடுகளை இழந்தோருக்கு போரூட் ஸ்தாபனம் வலந்தலையில் 150 ஓலை வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது. [ஓ-15]

## பொருள் இறக்கும் வேலை டீசல் இழுபறியால் தாமதம்

பருத்தித்துறை, டிச.14

கடந்த 10ஆம் திகதி பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்த 'லங்காசிறி' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் புதனன்று தான் ஆரம்பமாகின

டீசல் பிரச்சினையால் ஏற்பட்ட இழுபறியே பொருள் இறக்குவதில் தாமதம் ஏற்படக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொருள்களைக் கப்பலில் இருந்து கொண்டுவரும் பிரச்சினை இழுக்கும் வள்ளங்களுக்கு இதுவரை ஏழு லீற்றர் டீசலே வழங்கப்பட்டு வந்தது.

இது போதாது என்று வள்ள ஓட்டிகள் தெரிவித்திருந்தனர். பத்து லீற்றர் டீசல் தருமாறு அவர்கள் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இந்த இழுபறியால் கப்பலுக்கு வள்ளங்கள் செல்ல மறுத்துவிட்டன.

இறுதியில் வள்ள ஓட்டிகளின் கோரிக்கை ஏற்கப்பட்டதை அடுத்தே கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் புதன் ஆரம்பமாகின [இ-118]

## அத்துலத்துக்கு கல்தா?

கொழும்பு, டிச. 14

அமைச்சர் பதவியில் இருந்து திரு. லலித் அத்துலத்முதலி வெளியேற்றப்படுவார்?

கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இந்த கேள்வி தான் கடந்த சில தினங்களாக பரவலாக அடிபடுகிறது.

விரைவில் அமைச்சரவையை ஜனாதிபதி பிரேமதாஸா மாற்றிஅமைக்க இருப்பதாகவும்—

புதிய அமைச்சரவையில் திரு. லலித் அத்துலத்முதலி இடம்பெற மாட்டார் என்றும் கொழும்பில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

அண்மையில் கொழும்பு றோயல் கல்லூரி பரிசளிப்பு விழாவில் ஜனாதிபதி பிரேமதாஸா தமக்கு அருகில் திரு. லலித் அத்துலத்முதலியை வைத்துக்கொண்டு நிகழ்த்திய பேச்சு, இவ்வதந்திகளுக்கு உரமூட்டுவதாக அமைந்திருந்தது.

ஜனாதிபதி தனது உரையில் "தேசிய கல்வி ஆணைக்குழு ஒன்றை உருவாக்கி வருகின்றேன், ஆணைக்குழுவின் கல்வி சீர்திருத்தக் கொள்கைகளை றோயல் கல்லூரி பழையமாணவர் ஒருவர் [லலித் அத்துலத்முதலி] தான் அமுல்நடத்துவார்" - என்று ஒரு கட்டத்தில் கூறினார்.

ஆனால் தனது பேச்சின் இன்னொரு கட்டத்தில் ஜனாதிபதி—

"நீங்கள் றோயல் கல்லூரியின் மாணவராக இருந்தாலும் குழுவாக [Team] வேலை செய்யப் படித்துக் கொள்ள வேண்டும்.

றோயல் கல்லூரியின் நோக்கமும் 'படியுங்கள்; அல்லது வெளியேறுங்கள் என்பது தான்'- என்றும் கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் இப்பேச்சு அமைச்சர் லலித்துக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையா? என்று அவதானிகள் கேட்கிறார்கள், (உ-எ)

## ★ கல்முனையில் புகார்கள் பதிவுசெய்வதிலும் பொலீஸார் பாகுபாடு

கல்முனைப் பகுதியில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களின் புகார்களைப் பதிய கல்முனைப் பொலீசார் கட்டுப்பாடு விதித்துள்ளனர்

பயங்கரவாதிகளினால் கொல்லப்பட்டால், அல்லது காணாமல் போனால் மட்டுமே பொதுமக்கள் புகார் செய்ய முடியும் என்று அவர்களால் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாம்,

பொலீஸ் முறைப்பாடு பெற முடியாததால் மரணப் பதிவு செய்ய முடியாத நிலையில் பெரும்பாலான நிவாரணங்களைப் பெற முடியாதுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

[illegible] அவர் [illegible] செய்துள்ளனர். [இ-3]

## ஒளிவிழா

குருநகர், டிச. 14

யாழ் புனித மரியாள் [ஓ. எல். ஆர்] வித்தியாலயத்தில் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு "ஒளிவிழா" நிகழ்ச்சி நடைபெறவுள்ளது (இ-51)

## தண்ணீர்ப் பிரச்சினை: சமாளிக்க புங்குடுதீவு ப. நோ. கூ. ச. முயற்சி

புங்குடுதீவு, டிச 14

புங்குடுதீவுப் பகுதியில் அடுத்துவரும்மாதங்களில் ஏற்படவிருக்கும் குடிதண்ணீர்ப் பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கு புங்குடுதீவு நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்னேற்பாடுகளைச் செய்திருக்கிறது.

இதற்காக சங்கம் சாட்டியில் காணி ஒன்றை கொள்வனவு செய்துள்ளது.

நன்னீர்க் கிணறுகளைத் தோண்டுவதற்க வசதியான இந்த 18 பரப்புக்காணி 83 ஆயிரத்து 750 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இக்காணியில் ஜனவரியிலிருந்துகிணறுகள்அமைக்கும் பணி ஆரம்பமாகும் என்றும்—

இக்கிணறுகளில் இருந்து பெறப்படும் நன்னீரினால் புங்குடுதீவுப் பகுதியில் ஏற்படவிருக்கும், குடிதண்ணீர் தட்டுப்பாட்டை முழு அளவில் தீர்த்துவைக்க முடியும் என்றும்—

இந்தத் திட்டத்தினால் சுமார் 25 ஆயிரம் பேர்கள் பயன் அடைவார்கள் என்றும் மேற்படி சங்க நிர்வாகம் தெரிவித்துள்ளது. (உ-131)

## வயிற்றோட்ட நோய் பரவுகின்றது

கொழும்பு, டிச 14

குருநாகல் மாவட்டத்தில் வயிற்றோட்ட நோய் தீவிரமாக பரவி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ

## 2 வயது பாலகன் மரணம்

தென் ராட்சி, டிச.14

ஆனையிறவில் இருந்து இடம்பெயர்ந்து சாவகச்சேரி, கச்சாய் வீதியில் தங்கியிருந்த இரண்டு வயதுப் பாலகன் ஒருவன் மூளைக் காய்ச்சல் நோய்க்கு ஆளாகி மரணமானான்.

இந்தப் பாலகனின் தந்தையும் சாவகச்சேரியில் இடம்பெற்ற [illegible] தாக்குதலில் [illegible] விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. [ஓ-117]

---

கைதியாகவுள்ள மாணவர்களுக்காக

## பல்கலைக்கழகங்களுக்கு அருகில் தடுப்புமுகாம்கள்!

கொழும்பு, டிச.14

தென்பகுதி பல்கலைக்கழகங்களுக்கு அருகில் தடுப்பு முகாம்களை அமைத்து, அவற்றில் தடுப்புக் காவலில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களை தங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது

இதன் மூலம் தடுப்புக்காவலில் உள்ள மாணவர்கள் தடையின்றி பல்கலைக்கழகங்களுக்குச் சென்று படிப்பைத் தொடர முடியும் என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன

தற்சமயம் சுமார் 100 பல்கலைக்கழக மாணவர்கள் தடுப்பு முகாம்களில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்

இப்புதிய திட்டத்தை செயல் படுத்துவதற்கு பல்கலைக்கழக மானியக் குழுவும் பாதுகாப்பு அமைச்சும் சம்மதம் தெரிவித்துள்ளன என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் அர்ஜுனா அலுவிஹார தெரிவித்தார்.

## சைக்கிள் [illegible]

வல்லைப் [illegible] பகுதியில் [illegible] சைக்கிளை நிறுத்திவிட்டு [illegible] மீன் பிடிக்கச் சென்றவர் சைக்கிளை இழந்தார்.

புத்தூர் [illegible] பகுதியைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி பத்மநாதன் என்பவரே சைக்கிளை இழந்தவர் ஆவார். [இ-11

## கூரைத் தகரங்கள் அன்பளிப்பு

வலி வடக்குப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த அகதிகள் தங்குமிடங்களை அமைக்க வசதியாக சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான 250 கூரைத்தகரங்களை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய யாழ். பிரிவு வழங்கியுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து, தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவில் அகதிமுகாமில் தங்கியுள்ளவர்களது தேவைகளுக்காகவே இந்த கூரைத் தகரங்கள் கடந்த வாரம் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (உ-5)

## மத்திய வங்கி ஓய்வூதியர் கூட்டம்

யாழ் மாவட்டத்தில் வசிக்கும் - இலங்கை மத்திய வங்கி ஓய்வூதியக்காரர்கள் - அனைவருக்குமான கூட்டம் ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல. 142 பலாலி வீதி, திருநெல்வேலியில் உள்ள இல்லத்தில் நடைபெறவிருக்கிறது. [உ]

## வைத்திய அதிகாரிகளாக ஆயுள்வேத வைத்தியர்கள்

கொழும்பு டிச.14

முதல் தடவையாக ஆயுள்வேத வைத்தியர்களை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகளாக நியமிக்க அரசாங்கம் முடிவு செய்து உள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் உத்தரவின்மீது சுகாதார அமைச்சர் ரேணுகா ஹேரத் இதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்

முதற்கட்டமாக ஏழு ஆயுள்வேத வைத்தியர்கள் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகளாக நியமிக்கப்படவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது )இ-எ)

## வெற்றிலைக் கொழுந்துகள் அழிந்து விடும் ஆபத்து!

மாவிட்டபுரம் சந்தியைச் சூழவுள்ள வெற்றிலைத் தோட்டங்களில் இருக்கும் சுமார் 50 ஆயிரம் வெற்றிலைக் கொழுந்துகள் அழியும் நிலையில் இருப்பதாக அப்பகுதி வெற்றிலைச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இராணுவ நடவடிக்கைகளினால் அழிந்துபோயிருக்கும் கொழுந்துகள் போக எஞ்சியிருப்பவையும் தகுந்த பராமரிப்பு இன்றி அழிந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1987ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைகளினால் அழிந்து போய், பின்னர் தொண்டர் நிறுவனங்களின் நிதி உதவியுடன் மீள அமைக்கப்பட்டு பயன்தரும் நிலையை அடைந்திருக்கும் வெற்றிலைத் தோட்டங்களே தற்போது அழியும் நிலையை எட்டி இருக்கின்றன.

வெற்றிலைக் கொழுந்து ஒவ்வொன்றும் சராசரியாக பதினைந்து வருடங்கள் பயன் தரக்கூடியவை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-6ப் 8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்," இல. 256 A, பருத்தித்துறை வீதி நல்லூர். 'அரஸ் ஜவுளியகம்' 146 நவீன சந்தை யாழ்ப்பாணம். (15000)

## சேவை

தமிழ், ஆங்கில தட்டெழுத்து, றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்: அருண் மாக்கட்டிங் அன் சேவிஸஸ், 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-5516)

## தவறிவிட்டது

60, கடை வீதி வவுனியாவைச் சேர்ந்த சின்னத்தம்பி நாகேஸ்வரன் என்பவருடைய அடையாள அட்டையும் 8 படம் எடுக்க படியுள்ள படச்சுருள் (திருமணம்) கூடசோலை என்பனவும் சங்குப்பிட்டிக்கும் – பூநகரிக்கும் இடையில் தவறிவிட்டன. எடுத்தவர்கள் 107, பலாலி வீதி, கந்தர்மடம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். (15090)

## தவறிவிட்டது

92, அரசடி வீதியைச் சேர்ந்த பொன்னம்பலம் அம்பரசிங்கத்தின் நல்லூர் ப. நோ. கூ. சங்கம் கூட்டுறவு கிராமிய வங்கி சேமிப்புக் கணக்கு இல. 30119 உடைய புத்தகமும், இல. 30AN044314 உடைய ரூபா 2500/- காசோலையும் நல்லூர் கூட்டுறவு கிராமிய வங்கிக்கும் – திருநெல்வேலி சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. எடுத்தவர்கள் நீராவியடி உபதபாற்கந்தோரில் சமர்ப்பிக்கவும். சன்மானம் வழங்கப்படும். (15108)

## விற்பனைக்கு

சுத்த நல்லின அல்சேசன் கறுப்பு மண்ணிற [Black and Tan] ஆண் நாய் ஒரு வயது 3 மாதம் தடுப்பு ஊசிகள் யாவும் போடப்பட்டு மிகவும் நல்ல நிலையில் உள்ளது. பாம் ஹவுஸ் கோட் றோட், மல்லாகம். [15109

## தேவை

பெண்களுக்கும், ஆண்களுக்குமான ஆடைகள் வெட்டவும் தைக்கக் கூடியவர்களும் உடன் தேவை. இருபாலாரும் நேரில் வரவும். லக்கி தையல் நிலையம், 182, கண்டி வீதி, யாழ்ப்பாணம் 15112

## எஞ்சின் விற்பனைக்கு

Ceegee 10 H Power எஞ்சின் மில்லில் ஓடிக் கொண்டிருப்பது உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிவம் மில், சந்தையடி. மானிப்பாய். [15115]

## வகுப்புக்கள்

English Steno வகுப்புக்கள் மார்கழி மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளன அத்துடன் விசேட ஆங்கில வகுப்பும் ஆரம்பமாகவுள்ளது நேரில் வந்து தொடர்பு கொள்ளவும். அதிபர், உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (15096)

## மணமகன் தேவை

நல்ல குடும்பத்தைச் சேர்ந்த இருபாகம் C. I. M. A சித்தியடைந்த 28 வயது அழகிய யாழ். இந்து மணமகளுக்கு மணமகன் தேவை. குற்றமற்ற சாதகம் முழு விபரத்தையும் குறிப்புடன் அறியத் தரவும். 159, C/o, உதயன். (15106)

# விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L** பிரிவு 4 **DAY CLASSES** (8.30 — 1.30)

புதிய பிரிவு ஆரம்பம்: 14 – 12 – 90

பிரிவு 2 **SAT, SUN CLASSES** (8.00 — 2.00)

புதிய பிரிவு ஆரம்பம்; 15 – 12 – 90

பிரிவு 4 **EVENING CLASSES**

புதிய பிரிவு ஆரம்பம்: 14 – 12 – 90

ஆண்டு 10, 9, 8, 7, 6 புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன

மு: குறிப்பு: i கடமை கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.
ii விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும். (சி–5527)

# கரோல் ஆராதனை

எதிர்வரும் 16-12-90 மாலை 3.00 மணிக்கு "ஏலீம் சிறுவர் இல்லத்தின" கரோல் ஆராதனை மானிப்பாய் மெமோரியல் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

— ஏலீம் சிறுவர் இல்லம் —
மானிப்பாய் (15107)

# நல்லூர் ஸ்ரீசட்டநாதர் ஆலய பரிபாலன சபையின் அறிவித்தல்

இந்துசமய கலாச்சார அமைச்சின் பதிவிலக்கம் HA/5/JA 228.

மேற்படி ஆலய பரிபாலன சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் 31-3-1991இல் முடிவடையும். புதிய பரிபாலனசபை உறுப்பினர்கள் தெரிவு உரிய காலத்தில் நடைபெற்று 1-4-1991இல் பதவியேற்கும்.

பொதுச்சபை உறுப்பினர்களாக புதிதாகச் சேர விரும்புவோரும் வருடாந்த சந்தா கட்டிய பழைய உறுப்பினர்களும் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன் உரிய சந்தாப்பணத்தைக் கட்டி உறுப்பினர்களாகவும்.

1. ஆண்டுச்சந்தா — ரூபா 25/-
2. ஆயுட்சந்தா — ரூபா 100/-

நிர்வாகசபை உறுப்பினராக போட்டியிட விரும்புவோர் ரூபா 100/- செலுத்தி அங்கத்தவராகச் சேர வேண்டும்.

மேலதிக விவரங்களை ஆலய காசாளரிடமிருந்து அறிந்து கொள்ளவும். வருடாந்த கூட்ட திகதியும் விவரங்களும் உரிய காலத்தில் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்படும்.

வ. பரமசிவம்
செயலாளர்,
[15105] ஸ்ரீ சட்டநாதர் ஆலய பரிபாலனசபை

அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்

# கண்ணீர் அஞ்சலி

கூட்டுறவுத் தந்தையும் வழிகாட்டியுமாகத் திகழ்ந்த அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்

உடுப்பிட்டி மந்தி மகளிர்
[14693] ஐக்கிய நாணய சங்கம்

# நினைவஞ்சலி

1 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம்





| மார்க்கண்டு மனோன்மணி | மார்க்கண்டு தர்மினி |
|---|---|
| பிறப்பு: 1940 – 05 – 08 | பிறப்பு: 1964 – 02 – 04 |
| இறப்பு: 1989 – 12 – 14 | இறப்பு: 1990 – 05 – 22 |

குடும்ப ஒளியாக, குலவிளக்காகச் சுடர்விட்டு வையகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எம்மை வாழ்வித்த அன்புத் தெய்வங்களே உங்களைப் பிரிந்து துன்ப இருளில் தவிக்கின்றோம்,
காலம் பல கடந்தாலும் உங்களை நாம் மறவோம்!

மார்க்கண்டு குடும்பத்தினரும்,
உற்றார், உறவினர்,
நண்பர்களும்.

73, செம்மணி வீதி,
நாயன்மார்க்கட்டு,
(சி/5092)

வட இலங்கை மருத்துவக் கல்லூரி

# அவசரக் கூட்டம்

காலம்:- 15 – 12 – 1990 சனிக்கிழமை
நேரம்:- காலை 9.00 மணி
இடம்:- கல்லூரி கேட்போர் கூடம்

அனைத்து மாணவர்களும் தவறாது சமூகம் அளிக்கவும்.

செயலாளர்:
மாணவர் ஒன்றியம்
[14695]

# காணவில்லை

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், உரும்பராய் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திரு சின்னத்துரை சண்முகநாதன் அவர்கள் 26, ஸ்ரீ 853 இலக்க லொறிசாரதி. 25-11-90 நள்ளிரவு வவுனியாவில் இராணுவத்தினரால் அழைக்கப்பட்ட பின் இதுவரை காணவில்லை. இவர் பற்றிய தகவல் தெரிந்தோர் தயவுசெய்து கீழ் காணும் விலாசத்திற்கு விபரம் தருமாறு வேண்டுகிறேன்

இங்ஙனம்
சி. கைலாயநாதன்,
C. C. T. M லன்,
(15114) கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

# 2 ஆம் வருட நினைவஞ்சலி

மலர்வு:
18-09-1958



உதிர்வு:
14-12-1988

## கணபதிப்பிள்ளை யோகேஸ்வரன்

(கணபதிப்பிள்ளை & சனஸ் – பனை)

ஆண்டுகள் பல சென்றாலும்
அழியாத காவியமாய்
கலையாத ஓவியமாய்
நிலைத்திருப்பாய் எங்கள் நினைவில்
உமது பிரிவால் துயருறும்

தந்தை, தாய், சகோதர, சகோதரிகள்
மைத்துனர், உறவினர்கள், நண்பர்கள்.

"இரஞ்சித பவனம்"
கண்டி வீதி,
கொடிகாமம். [14906]

# மரண அறிவித்தல்

## திருமதி. அன்னலட்சுமி சீவரத்தினம்

திருமதி அன்னலட்சுமி சீவரத்தினம் காலமானார். இணுவில் சிவன்கோவில் பரிபாலரான (இளைப்பாறிய ஆசிரியர்), ச. அருணந்தி சீவரத்தினத்தின் அன்பு மனைவியும், பரமேஸ்வரன், கௌரியம்மா, சிவஞானதேவி ஆகியோரின் அருமைத் தாயாரும், செந்திருச்செல்வி, மகேஸ்வரலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுயம்புலிங்கம், கோகிலவர்சினி ஆகியோரின் பேத்தியும், நாகம்மா, காலஞ்சென்ற நடராஜா (P. M) ஆகியோரின் சகோதரியும், இராமநாதன், பராசக்தி, விசாலாட்சி ஆகியோரின் மைத்துனியும் ஆவார். ஈமக்கிரியைகள் 10 – 13 – 90 திங்கட்கிழமை காரைக்கால் மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் பரமேஸ்வரன்.

சிவன்கோவில்,
கே. கே. எஸ். வீதி,
இணுவில். [15113]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org